**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No.32/2024**
**Prosecution Witness**:PW4

| | | | |
|---|---|---|---|
| Name | ஜோதி அருணாச்சலம் (PW4) | Caste | |
| Father's Name | பாலசுப்பிரமணியம் | Calling | |
| Village | அவிநாசி | Religion | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of March 2026** by K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present),*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் கேபிள் டிவி ஆபரேட்டராக வேலை செய்து வருகிறேன்.14.03.2023 தேதியன்று நான் அவிநாசி டு சேவூர் ரோட்டில் நான் சென்று கொண்டிருந்த சமயம் சம்பவ இடத்தில் போலீசார் விபத்து நடந்த இடத்தில் வரைபடம் தயார் செய்தனர். அதற்காக பார்வை மகஜரில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

இந்த விபத்து பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.போலீசார் வரைந்த வரைபடத்தில் சாட்சி கையொப்பம் இட சொன்னார்கள் அதற்காக சாட்சி கையப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்ததில் உள்ள விபரங்களை நான் படித்து பார்த்தேன் அதில் 13.3.2023 ஆம் வருடத்தில் மாலை 6:30 மணி அளவில் நடந்த விபத்து பற்றி இருந்தது வேறு விவரங்கள் எதுவும் இல்லை. நான் சொன்ன விபரங்களை தவிர வேறு விபரம் அதில் இல்லை. என்னை விசாரிக்கும் போது என்னுடன் மற்றொரு நபர் இருந்தார் ஆனால் அவர் யார் என்று எனக்கு தெரியாது. நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய் சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து

போன சுப்ரமணியம் என்னிடம் வேலை செய்தவர் அவர் எனக்கு உறவினர் அல்ல. இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ள மணிகண்டன் என்ற நபரும் என்னிடம் வேலை செய்தவர்.காலம் சென்ற சுப்பிரமணியம் என்னிடம் வேலை செய்தவர் என்பதால் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.N.Keerthana)<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |